[28th February 1969

சுதந்திரக் கட்சி பேரவைக்கூட்டத் தீர்மானம்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னையில் 1968 மே-ஜூன் மாதங்களில் நடந்த சுதந்திர கட்சி மாநாட்டில் கம்யூனிஸ்டுகளின் செல்வாக்கு தமிழகத்தில் பரவுவதை தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு தமிழக அரசுக்கு வேண்டுகோள் விடப்பட்டதா ?

(இ) ஆமெனில், அதன் மேல் எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) 1968 ஜூன் 1, 2 தேதிகளில் சென்னையில் நடந்த சுதந்திரக் கட்சிப் பேரவைக் கூட்டத்தில் இத்தகைய தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

(இ) குறிப்பான நடவடிக்கை எதுவும் தேவையில்லையெனக் கருதப்படுகிறது. நிலைமையை அரசாங்கம் நன்கு அறிந்து அது பற்றிக் கூர்ந்து நோக்கி வருகிறது.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, தமிழகத்திலே நக்சல்பாரி கம்யூனிஸ்டுகள் தங்களுடைய கைவரிசையைக் காட்டியிருக்கிறார்கள் என்று பத்திரிகை செய்தி வந்துகொண்டிருக்கிறது. அவர்கள் விஷயத்தில் சர்க்கார் தக்க கண்காணிப்புடன் நடந்து கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அவர்கள் கைவரிசையைக் காட்ட ஆரம்பித்தால், சர்க்கார் உறுதியோடு, கண்டிப்போடு, நடவடிக்கை எடுப்பார்கள் என்று உறுப்பினர்கள் திடமாக நம்பலாம்.

திரு. எம். எத்திராஜுலு : கம்யூனிஸ்டு சக்திகள் இந்த தமிழகத்தில் உருவாகி அவர்கள் செல்வாக்கு பரவவில்லை என்று இந்த அரசு நினைக்கிறதா ? அப்படியில்லை என்றால் கீழ்வெண்மணி சம்பவம், விவசாயிகள் தகராறு, மாவோவின் போஸ்டர்கள் ஒட்டப்படுவது இவைகளுக்கெல்லாம் என்ன காரணம் ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்படுவது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கூறியது போல நக்சல்பாரி கம்யூனிஸ்டுகள் வேலையாக இருக்கும். அதற்கும் இடதுசாரி கம்யூனிஸ்டுக் கட்சிக்கும் சம்பந்தமில்லை என்று அவர்களே அறிவித்திருக்கிறார்கள்.

Mr. CHAIRMAN : Questions 64 and 65 are postponed.

Diet charges in Government Hospitals

*68 *Q.*—THIRU G. KRISHNAMOORTHY (on behalf of THIRU M. RAJAH IYER): Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to lay a paper on the Table of the House specifying the rates of daily diet charges for the different wards towards the cost of the diet supplied to in-patients in Government Hospitals in the State?

28th February 1969]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: சட்டமன்ற மேலவை முன் விவர அறிக்கை [a] ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஜி. சுவாமிநாதன்: அரசாங்க மருத்துவ மனையில் ஒவ்வொன்றிலும் அகத்துள்ள நோயாளிகள் இவ்வளவு பேர்கள் தான் இருக்க வேண்டுமென்று அரசாங்கம் கணக்கு வைத்திருக்கிறது. ஆனால் தமிழகத்திலுள்ள அரசாங்க மருத்துவ மனையில் 1,000 நோயாளிகள் இருக்கவேண்டிய இடத்தில் இரண்டாயிரம் இருப்பதாக அறிகிறேன். இந்த நிலைமையை மாற்ற அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, மூலக் கேள்வியில் நோயாளிகளுக்கு வழங்கப்படும் உணவு பற்றியும், நோயாளிகள் தங்குகின்ற பிரிவுகளுக்கு உரிய உணவு விகிதங்களைப்பற்றியும் கேட்கப்பட்டிருக்கிறது. எனவே உறுப்பினர்அவர்கள் வேறு தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் சேகரித்துக் கொடுக்கலாம்.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை: இந்த சபைமுன் சமர்ப்பிக்கப் பட்டுள்ள அறிக்கையில் அன்றாட உணவுக்கு கட்டணம் நோயாளியின் வருமானம் ரூ. 150-லிருந்து 200 வரையுள்ளவருக்கு ரூ. 1.00 என்றும் 200-க்கு மேல் உள்ளவர்களுக்கு ரூ. 1.50 என்றும் வசூலிக்கப்படுவதாகத் தெரிகிறது. குறைந்த சம்பளம் வாங்குவதால் நல்ல உணவு சாப்பிட முடியாமல் மருத்துவ மனைக்கு நோய்வாய்ப்பட்டு வருகிறார்கள். அவர்களுக்குத்தான் சத்துள்ள உணவு கொடுக்கப் படவேண்டும். ஆனால் அதிகச் சம்பளம் வாங்குபவருக்கு நல்ல உணவு அளிக்கப்படுகிறது. இந்த நிலைமையை மாற்றி அதற்கேற்ப தக்க ஏற்பாடுகளை அரசாங்கம் செய்யுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: மாற்றுவதற்கு வேண்டிய ஆலோசனையை அரசாங்கம் பரிசிலனை செய்துவருகிறது. கனம் உறுப்பினர்களைப் போன்றவர்களும் மற்றவர்களும் ஒப்புக்கொண்டால், விரைவில் அந்த மாற்றத்தை அரசாங்கமும் ஒத்துக்கொள்ளும்.

திரு. எம். எத்திராஜுலு: நேற்றைய தினம் என்னுடைய தந்தையாருக்குக் கண் நோய் மருத்துவ மனையில் சிகிச்சை செய்வதற்காக அழைத்துச் சென்று தனி வகுப்பில் சேர்த்தேன். படுக்கைக் கட்டணம், சாப்பாட்டுக் கட்டணம் என்று ரூ. 3-50 வசூலித்தார்கள். அங்கே சென்று பார்த்தால் அது 'சி' வகுப்பாகவே தெரியவில்லை. படுக்கைகள் எல்லாம் அழுக்கு படிந்திருக்கின்றன. இதை அமைச்சர் அவர்கள் சுற்றிப்பார்த்தால் தெரியும். அதைச் செய்து 'சி' வகுப்பு போன்றவைகளில் உள்ள சுகாதாரக் குறைவைப் போக்க தக்க ஏற்பாடுகளை அமைச்சர் அவர்கள் செய்வார்களா ?

---

[a] Printed as Appendix on pages 51-52

[28th February 1969

மாண்புமிகு திருமதி சத்தியவாணி முத்து: நிதிநிலை அறிக்கை மீது விவாதம் நடைபெறும் போது உறுப்பினர் அவர்கள் இவ்விதக் கருத்துக்களை எடுத்துச் சொல்லலாம்.

திரு. சா. கணேசன்: இந்த அறிக்கையில் 'Diet charges' என்று போட்டிருக்கிறது. அது நோயாளிகள் ஆஸ்பத்திரிக்குக் கட்டுகிற கட்டணமா? உணவுக்காக அரசாங்கம் செய்கிற செலவுத் தொகையா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: உணவுக்காக மாத்திரம் தரப்படுகிற கட்டணம்.

Private practice by Government Doctors

*69 Q.—THIRU N.R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state—

(a) whether there is any proposal to ban private practice by Doctors serving in Government Hospitals; and

(b) if so, the stage at which the proposal stands?

அரசாங்க மருத்துவர்கள் தனியாக தொழில் நடத்தல்

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு சுகாதார-அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசாங்க மருத்துவ மனைகளில் பணிபுரியும் மருத்துவர்கள் தனியாக தொழில் நடத்துவதை தடை செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

(இ) ஆமெனில், அச்செயற்குறிப்பு எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவர் அவர்களே, அரசாங்கத்திலே ஆனரரி சர்ஜனாக வேலை பார்க்கிறவர்கள் அந்தச் சலுகையைப் பயன்படுத்தி வெளியிலே தங்களுடைய தொழிலில் அதிக வருமானம் சம்பாதிக்கும் நிலையில் இருக்கிறார்கள். அவர்களை ஆனரரி சர்ஜனாக நியமிப்பது பற்றி பத்து வருஷமாக இந்த அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறது. எஸ்டிமேட் கமிட்டியில் இதைப்பற்றி அனுப்பிய ரிபோர்டில் அதைக் கூறியிருக்கிறோம். ஆனால் இன்னும் அரசாங்கத்தில் வேலை செய்யும் வைத்தியர்கள் வெளியிலேயும் பிராக்டிஸ் செய்துகொண்டுதான் இருக்கிறார்கள். அரசாங்க ஆஸ்பத்திரிகளில் சலுகை அதிகமாக இருக்கிறது. அவர்கள் ஆஸ்பத்திரி மருந்துகளை வெளியே கொண்டுபோய் விடுகிறார்கள். இதையெல்லாம் அரசாங்கம் கவனிக்குமா?